1986 நவம்பர் 18]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, All these will be settled out of court peacefully between the parties—

என்ற முறையிலே இரு சாராருக்கும் இடையிலே சுமுகமான முறையிலே பேசி, அவர்கள் ஒத்த தீர்வினைக் காண்பார்கள்.

ஜெயங்கொண்டத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்

56—(*வினா எண் 4499) டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் நகரில் அரசு ஊழியர்களுக்கு (N.G.O.) வீடு கட்டித் தரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்திலே வேறு எந்தத் தாலுகாவினுடைய தலைநகரத்திலாவது இப்படி என்.ஜி.ஓ.க்களுக்கு வீடு கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு அலுவலர் குடியிருப்பைப் பொறுத்தவரையிலும், மாவட்டத் தலைநகரங்கள் மற்றும் கோட்டாட்சித் தலைநகரங்களில்தான் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. ஜெயங்கொண்டாம் வட்டத் தலைநகரம் என்ற காரணத்தாலே இந்தத் திட்டம் இப்பொழுது அங்கே இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகின்ற பொழுது, மாவட்டத் தலைநகரங்களிலும் மற்றும் கோட்டத் தலைநகரங்களிலும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்துவதாகக் குறிப்பிட்டார்கள். தாலுகா தலைநகரங்களிலும் அதிகமான அளவிலே என்.ஜி.ஓ.க்கள் பணி புரிகின்றார்கள். ஜெயங்கொண்

டாம் பகுதியிலே அதிக வீட்டு வசதி இல்லாத காரணத்தால் இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து, தாலுகா தலை நகரங்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகா அளவில் பின்னால் விரிவு செய்யும்போது, ஜெயங்கொண்டாம் கவனத்தில் கொள்ளப்படும்.

கோவையில் உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை.

57—(*வினா எண். 6584) திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த ஆகஸ்டு முதல் வாரத்தில் கோவை வந்த உலக வங்கி அதிகாரிகளிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா?

(ஆ) கோவை நகரில் எந்தெந்தத் திட்டம் விவாதிக்கப் பட்டது?

(இ) விவாதத்தின் முடிவில் இறுதியாக்கப்பட்டவை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) மற்றும் (இ): கோவை உட்பட 5 நகரங்களுக்குப் பல திட்டங்கள் செயல்படுத்துவதுபற்றிப் பொதுவாக விவாதிக்கப்பட்டது. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் ரூ. 428 கோடி மதிப்பீட்டில் ஒரு அறிக்கை தயாரித்து, தமிழ்நாடு பெருநகர் வளர்ச்சித் திட்டம் என்ற பெயரில் மைய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பப் பட்டிருக்கிறது.

திரு. கே. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிடமிருந்து கோவை நகரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக பெற உத்தேசிக்கப்பட்டுள்ள தொகையின் மொத்த அளவு என்ன? அப்படி உத்தேசிக்கப்பட்டிருக்கிற திட்டங்கள் எந்தக் கால அளவில் துவக்கப்படும்? துவக்கப்படுகிற திட்டங்களை விரைவாக முடிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்த 5 நகரங்களுக்கும் சேர்த்து, ரூ. 428 கோடிக்குத் திட்டமிட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. கோவையைப் பொறுத்தவரைக்கும் மேம்படுத்தப்பட்ட மனைகள் திட்டத்திற்காக ரூ. 25 கோடி,